# நெல்லிக்குப்பம் நகராட்சி
## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2018–ம் ஆண்டு மே மாதம் 09 ஆம் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.மகாராஜன்
தனி அலுவலர்
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றப்பொருள் .1** நெல்லிக்குப்பம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாடு திட்டம் (TURIP) 2018–2019 – ன் கீழ் அரசு மானியம் பெற்று மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ள கீழ் கண்ட சாலைகளை ரூபாய் 300.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கவும் அதற்கான முன் மொழிவுகளை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 9 வது வார்டு தமிழ் கருமாரத் தெருவில் தார் சாலை அமைத்தல் பணி | 19.00 |
| 2 | 14 வது வார்டு .திருக்கண்டேஸ்வரம் மெயின் ரோட்டில் தார் சாலை அமைத்தல் பணி | 45.00 |
| 3 | 16 வது வார்டு . தனலட்சுமி நகரில் தார் சாலை அமைத்தல் பணி | 12.50 |
| 4 | 16 வது வார்டு . நர்மதா நகர் மெயின் ரோட்டில் விடுபட்ட பகுதிக்கு தார் சாலை அமைத்தல் பணி | 14.00 |
| 5 | 13 வது வார்டு . திருக்கண்டேஸ்வரம் காலனி மெயின் ரோடு ( நெடுஞ்சாலை சாலை முதல் முதல் குறுக்கு தெரு வரை) தார் சாலை அமைத்தல் பணி | 9.50 |
| 6 | 1 வது வார்டு மற்றும் 2வது வார்டு விஸ்வநாதபுரம் முதல் வான்பாக்கம் வரை தார் சாலை அமைத்தல் பணி | 22.00 |
| 7 | 2 வது வார்டு காமராஜ் நகரில் தார் சாலை அமைத்தல் பணி | 20.00 |
| 8 | 12 வது வார்டு சோழவல்லி சுடுகாட்டு சாலை தார் சாலை அமைத்தல் பணி | 21.30 |
| 9 | 16 வது வார்டு பாபா நகரில் தார் சாலை அமைத்தல் பணி | 14.50 |
| 10 | 16 வது வார்டு திரௌபதி அம்மன் கோயில் தெருவில் தார் சாலை அமைத்தல் பணி | 22.20 |
| 11 | 25 வது வார்டு காமராஜ் நகரில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 18.00 |

| | | |
|---|---|---|
| 12 | 15 வது வார்டு வாழப்பட்டு அருணாச்சலம் தெரு மற்றும் மேட்டு தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 27.80 |
| 13 | 24 வது வார்டு மாருதி நகரில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 18.00 |
| 14 | 12 வது வார்டு சோழவல்லி குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 14.00 |
| 15 | 20 வது வார்டு மோரை மேட்டு தெருவில் விடுபட்ட பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 6.00 |
| 16 | 24 வது வார்டு கல்கி நகரில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 16.20 |
| | மொத்தம் | 300.00 |

அலுவலககுறிப்பு:- . மன்றம் அனுமதிக்கலாம் .
(ந.க.எண் . 2022/2018/இ1)
**தீர்மான எண் : 100 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

<u>மன்றப்பொருள் 2.</u> நெல்லிக்குப்பம் நகராட்சியில் பொறியியல் பிரிவுக்கு கோப்புகள் , பதிவேடுகள் மற்றும் முக்கியமான ஆவணங்களை பாதுகாப்பாக வைத்து உபயோகிக்க ஒரு பெரிய தடிமன் தகட்டிலான பீரோ தேவைப்படுவதால் அவசர அவசியம் கருதி வாங்க தோராய செலவினம் ரூ . 9000/- யை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலகக்குறிப்பு : -</u> மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் . 2086/2018/இ1)
**தீர்மான எண் : 101 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

<u>மன்றப்பொருள் 2.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி கணினி பிரிவு ,பொதுப்பிரிவு , பொது சுகாதார பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு , கணினி வரி வசூல் மையம் , சமுதாய அமைப்பாளர் , நகர மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் மேஜைகளில் உள்ள கணினி , கணினி அச்சிடும் கருவிகள் மற்றும் கணினி சார்ந்த கருவிகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்குதல் , Antivirus மென் பொருள் நிறுவுதல் , கணினி அச்சிடும் கருவிகளுக்கு தேவையான டோனர் (கணினி எழுது பொருள்) வாங்குதல் மற்றும் டோனர் மை நிரப்புதல் போன்ற பராமரிப்பு பணியின் அவசர அவசியம் கருதி தேவைப்படும் உத்தேச செலவினம் ரூ. 1,50,000 ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. அன்றாட அலுவலக பணி மற்றும் தேர்தல் பணி ஆகியவற்றின் அவசர அவசியம்கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2298 /2018/இ1).
**தீர்மான எண் : 102 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

09/5/18
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.
9/5/18